## S.C. No.125/2018

**எதிரிகள் 1, 2, 4 முதல் 8 வரை ஆஜர்.**

**சாட்சி பெயர்- திரு. எஸ். கிருஷ்ண்மூர்த்தி**

**தேதி-20.09.2024**

**அ.சா.14 இன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 மற்றும் 4 முதல் 7வது எதிரிகள் தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1, 2 மற்றும் 4 முதல் 7வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

அ.சா.ஆ.18 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.19 மாதிரி வரைபடத்தில் சம்பவத்தில் பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்கள் பற்றிய குறிப்பு ஏதேனும் உள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு சம்பவ இடத்தில் ஆயுதங்கள் ஏதேனும் இருந்திருந்தால் அதனை பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் எனக்கு சம்பவ இடத்தில் ஆயுதங்கள் இருந்ததா என்பதை பற்றி தற்போது ஞாபகமில்லை.

சம்பவ இடத்தில் நான் எதை எல்லாம் பார்த்தேனா அதை பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் ஆயுதங்கள் ஏதாவது இருந்திருந்தால் அதை நான் பார்த்திருந்தால் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி இருப்பேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.18 பார்வை மகசரில் சம்பவ இடத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். சாட்சி மீண்டும் பார்வை மகசரை பார்த்து குறிப்பிடப்படவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.

அ.சா.1 திரு. செல்வராஜ் என்பவரை 01.08.2011 அன்று தெள்ளார் காவல் நிலைய குற்ற.எண்.205/2011-ல் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு நான் அனுப்பினேன் என்றால் சரிதான். நான் சாட்சிகள் செல்வராஜ், குமாரி மற்றும் லட்சுமி தேவி ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தது 01.08.2011 தான் என்றால் சரிதான். குமாரி மற்றும் லட்சுமிதேவி ஆகியோரை தெள்ளார் காவல் நிலைய குற்ற.எண்.205/2011-ல் கைது

செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் குமாரி மற்றும் லட்சமி தேவியை கைது செய்யவில்லை என்றும் நான் இந்த வழக்கிற்காக பெய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கிற்கு எதிர் வழக்கிற்காக அமைந்திருப்பது தெள்ளார் காவல் நிலைய குற்ற.எண்.205/2011 என்றாலும், சம்பவ இடம் மற்றும் சம்பவ தேதி ஆகியவை ஒன்று என்றாலும் சரிதான். இந்த வழக்கில் சம்பவ இடம் எந்த சர்வே எண்ணில் நடந்தது என்பதை பற்றி மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கில் எதிரிகளுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து சாட்சிகள் என்னிடம் சொல்லவில்லை என்றால் அதை பற்றி எனக்கு ஞாபகமில்லை.

எதிரிகளுக்கு ஏற்பட்ட காயங்களை பற்றி தெரிந்திருந்தும் அதை பற்றி ஞாபகமில்லை என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தெள்ளார் காவல் நிலைய குற்ற.எண்.205/2011-ல் காயம் பட்டவர்களான கன்னியம்மாள், மாரிமுத்து, ராதா மற்றும் தனலட்சமி ஆகியோர் மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு மருத்துவமனைக்கு சென்றனர் என்றும் அதை பற்றி நான் விசாரித்து காயச் சான்று பெற்றுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. கன்னியம்மாள் என்பவருக்கு தலை மற்றும் நரம்புச் சம்மந்தமாகவும் மற்றும் முகம் ஆகிய இடங்களில் காயம்பட்டதால் அவரை செங்கல்பட்டு மருத்துவமனையிலிருந்து சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டார் என்றும் சென்னை மருத்துவமனையில் 10 நாட்கள் சிகிச்சை பெற்றார் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

எதிரிகளுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்த ஆவணங்களை தெள்ளார் காவல் நிலைய குற்ற எண்.205/2011-ல் முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு சாதகமான ஆவணங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யாமல் எதிரிகளுக்கு எதிராகவும் சாட்சிகளுக்கு சாதகமாகவும் ஒருதலைபட்சமாகவும் செயல்பட்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தெள்ளார் காவல் நிலைய குற்ற.எண்.205/2011-ல் போடப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் படி செல்வராஜ் வகையறா தான் எதிரிகளை தாக்கினார்கள் என்றால் நான் இரண்டு வழக்கிற்கும் முதல் தகவல் அறிக்கையை நியாமாக தான் பதிவு செய்துள்ளேன்.

செல்வராஜ் வகையறா எதிரிகளை தாக்கும் போது இருட்டில் செல்வராஜ் வகையறா மீதே

அடிப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரி சீத்தாராமன் என்பவருக்கு சம்பவத்திற்கு முன்பாகவே கண் தெரியாது என்றும் அவர் தன்னிச்சையாக நடக்க முடியாது என்றும் இவ்வழக்கில் சாட்சிகளுக்கு தூண்டுதலின் பேரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் மாரிமுத்து இரும்புத் தடியால் தன் மாமனார் தலையில் அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை.

அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் செல்வராஜ் என்பவர் தன்னை மாரிமுத்து என்பவர் இடது மண்டையிலும், இடது கை நடுவிரலிலும் வெட்டியதாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. செல்வராஜ் என்பவர் என்னுடைய விசாரணையில் தமிழ்மணி என்ற சாட்சி இருந்ததாகவும், கத்தியை அவர் பிடிங்கி போட்டதாகவும் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. பெண் எதிரிகள் இரும்பு தடியால் செல்வராஜின் மாமியார் லட்சுமிதேவி என்பவரை அடித்தாக செல்வராஜ் என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இரும்பு தடியால் அடித்ததாக சொல்லவில்லை, கொம்பால் அடித்ததாக சொல்லியுள்ளார்.

செல்வராஜ் என்பவரை 01.08.2011ல் கைது செய்யும் போது அவரை காப்பாற்ற வேண்டி அவரிடம் நான் வெற்று தாளில் கையொப்பம் வாங்கி அதற்காக முன்தேதியிட்டு சி.எஸ்.ஆர் எண் கொடுத்து பொய்யான புகார் தயார் செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 செல்வராஜ் என்பவரின் புகார் வாக்குமூலம் பெற்றவுடன் அதை படித்து பார்க்கும் போதே அதில் குறிப்பிடப்பட்டிருந்த குற்றங்கள் பிடியாணை பெறத்தகு குற்றங்கள் என்ற விவரம் தெரிய வந்தது என்றால் சரிதான். பிடியாணை பெறத்தகு குற்றங்கள் என தெரிந்தவுடன் முதல் தகவல் அறிக்கை உடனடியாக பதிவு செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் கடமையிலிருந்து தவறியுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் மருத்துவமனைக்கு சென்று செல்வராஜ் என்பவரை விசாரித்து அதன் பிறகு சி.எஸ்.ஆர் எண் கொடுத்தேன் என்றாலும் அதன் பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்பது ஜோடிக்கப்பட்ட விவரங்கள் என்றால் சரியல்ல. சாட்சி குமாரி என்பவர் என்னுடைய விசாரணையில் சம்பவ நேரத்தில் தானும் தன் அம்மாவும் வேறு ஒரு நிலத்தில்

களை எடுத்துக் கொண்டிருந்தோம் என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. பொதுவாகவே சாட்சிகள் செல்வராஜ், குமாரி, லட்சுமிதேவி ஆகியோர் என்னுடைய விசாரணையில் சாயங்காலமாக இவ்வழக்கில் இறந்ததாக சொல்லப்படும் கண்ணன் என்பவருடன் சேர்ந்து செல்வராஜ் வீட்டிலிருந்து கிளம்பி எதிரிகள் நிலத்தில் போட்டிருந்த உளுந்து பயிரை டிராக்டர் வைத்து ஏர் ஓட்டி அழிப்பதற்காக சென்றதாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள்.

உளுந்து போட்டதாக சொல்லப்படும் இடத்தின் பட்டா எதிரிகள் பெயரில் உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த பட்டாவை இந்த வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் அனுபவத்தில் உள்ள நிலத்தில் சாட்சிகள் தான் சென்று எதிரிகளிடம் பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரையும் அடிக்கவில்லை என்றாலும், சாட்சிகள் யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

நான் 01.08.2011 அன்றே சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துவிட்டேன் என்றால் சரிதான். ஆனால் நான் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலங்கள், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை எல்லாம் நீதிமன்றத்திற்கு 16.08.2011 அன்று தான் அனுப்பப்பட்டது என்றால் நான் என்னுடைய விசாரணையை முடித்து காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டேன். முதல் தகவல் அறிக்கையில் 3பி காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் என்ற காலத்தில் 01.08.2011 என்றும் நேரம் காலை 11.00 மணி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 28.07.2011 அன்று மருத்துவமனையிலிருந்து எனக்கு தகவல் கிடைத்து, 29.07.2011 அன்று நான் மருத்துவமனைக்குச் சென்று புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.07.2011 அன்று சி.எஸ்.ஆர் எண் கொடுத்தேன். 01.08.2011 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

ஆனால் முதல் தகவல் அறிக்கையில் 01.08.2011 அன்று காலை 10.15 மணிக்கு நீதித்துறை நடுவர் பெற்று கையொப்பமிட்டுள்ளார் என்றால் 01.08.2011 அன்று இரவு 10.15 மணிக்கு தான் நீதித்துறை நடுவர் பெற்று கையொப்பமிட்டுள்ளார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யததற்காக ஏற்பட்ட காலதாமத்தை மறைக்க வேண்டியும், எதிரிகளை சாட்சிகளாக்கி

தான் இந்த வழக்கை பதிவு செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. துறை ரீதியான விசாரணையிலிருந்து தப்பிக்க வேண்டி நான் எதிரிகள் மீது பொய்யான புகாரின் தவறான புலன் விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>8வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

சாட்சி செல்வராஜ் என்பவரின் புகார் வாக்குமூலத்தில் 8வது எதிரி தட்சிணாமூர்த்தி என்பவர் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். 01.08.2011ல் சாட்சி செல்வராஜ், குமாரி, லட்சுமிதேவி ஆகியோர் என்னுடைய விசாரணையில் 8வது எதிரி தட்சணாமூர்த்தி சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** - இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Sujatha,
Additional Sessions Judge,
Arani.